DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 84/2025**

**Deposition of LW2 examined as PW2** (Eyewitness) Dt. 07.04.2026

| | |
|---|---|
| Name | கலியமூர்த்தி |
| Father's Name | பரமசிவம் |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | சீர்காழி |
| Age | 62/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.04.2026

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயத்தில் நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரி மற்றும் அ.சா.1 மணிகண்டன் ஆகியோர் எனது ஊரை சேர்ந்தவர். கடந்த 15.05.2023- ம் தேதி இரவு 8.30 மணியளவில் அ.சா,1 மணிகண்டன் செம்பதனிருப்பு பிள்ளயைார் கோவில் முனையில் வந்த போது அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரி கருணாநிதி டேய் நில்லுடா மணிகண்டா நீ என்ன பெரிய ஆளுமயிரா என்றும், குச்சிக்காரி மகனே, தேவிடியா மகனே என்றும், நான் அப்படிதாண்டா வரப்பை அண்டை கழிப்பேன் உன்னால் என்ன செய்ய முடியும் என்று மணிகண்டனின் சட்டையை பிடித்து இழுத்து, கையால் முதுகில் அடித்து, காலால் மணிகண்டன் மார்பில் உதைத்து, மணிகண்டன் கீழே விழுந்ததாகவும், அப்பொழுது அங்கு நின்று கொண்டிருந்த நானும், மாரிமுத்து மகன் செந்தில் இருவரும் விலக்கி விட்டதாகவும், மணிகண்டனை அவரது மகன் ரகுராமன் மயிலாடுதுறை அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரி எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

7/4/26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை